# தமிழில் தலித் இலக்கியம்

## (ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரல்)

## தொகுதி - 1




பதிப்பாசிரியர்கள் :

முனைவர் ப. தாமரைக்கண்ணன்

முனைவர் க. சேகர், முனைவர் த. காமராஜ், முனைவர் த. மோகன்தாஸ்

முனைவர் ச. செல்வகுமாரன், முனைவர் பெ. ஜெயச்சந்திரன், முனைவர் சி. குமார்

# தமிழில் தலித் இலக்கியம்

**பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்**

**தொகுதி - 1**

**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் **ப. தாமரைக்கண்ணன்**

முனைவர் **க. சேகர்** முனைவர் **த. காமராஜ்**

முனைவர் **த. மோகன்தாஸ்** முனைவர் **சு. செல்வகுமாரன்**

முனைவர் **பெ. ஜெயச்சந்திரன்** முனைவர் **சி. குமார்**

**ஜோதி பதிப்பகம்**

நெ. 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு

முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037.

## நூல் விவரம்

♦ தமிழில் தலித் இலக்கியம் (பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் தொகுதி – 1) ♦ **பதிப்பாசிரியர்கள் :** முனைவர் ப.தாமரைக்கண்ணன், முனைவர் க. சேகர், முனைவர் த. காமராஜ், முனைவர் த. மோகன்தாஸ், முனைவர் சு. செல்வகுமாரன், முனைவர் பெ. ஜெயச்சந்திரன், முனைவர் சி. குமார் ♦ **முதற்பதிப்பு** 2023 ♦ **பக்கங்கள்:** 500 ♦ **உரிமை :** தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை – 05. ♦ வெளியீடு: ஜோதி பதிப்பகம், நெ. 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு, முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037. தொடர்புக்கு : 9940190616

**விலை : 400/–**

**ISBN: 978-81-965227-4-2 (Volume - I)**

**நூல் கிடைக்குமிடம் : தமிழ்த்துறை**

**தொடர்புக்கு : 7695986435, 9840064700**

♦ **Thamizhil Thalith Ilakkiyam** (International Symposium Research Articles Volume - I) ♦ **Publishers :** Dr. B. Thamaraik kannan Dr. G. Sekar, Dr.D.Kamaraj, Dr. D. Mohandoss. Dr. S. Selvakumaran, Dr.P.Jeyachandiran, Dr. C.Kumar. ♦ First Edition: 2022 ♦ Pages: 500 Copyright: Dept. of Tamil, Presidency College, Chennai - 05. ♦ **Published by :** Jothi Publications, No. 2/1067, 11th Street, 2nd Cross Street, Mugappair West, Chennai 600 037. Cell: 9940190616

**Price : 400/-**

11. கலை இலக்கியங்களில் தலித் . . . . . . . . . . . . . . . . . 96
முனைவர் சி. ஆறுமுகம்

12. காலந்தோறும் இலக்கியங்களில்
ஒடுக்கப்பட்டோர் பதிவுகள் . . . . . . . . . . . . . . . . . . . 102
முனைவர் சி. ஆன்சிமோள்

13. தலித் அரங்கியல் வரலாற்றில் ஒரு வரலாறு . . . . . . . 110
கே.ஏ அ. இந்துமதி

14. உழைக்கும் மக்களின் வாழ்வியல் போராட்டங்கள் 119
முனைவர் வீ. இமயா

15. தலித் தன்வரலாறு – கே.ஏ.குணசேகரனின்
'வடு'வில் களங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . 124
வெ. இரமேஷ்

16. அறிஞர் அண்ணாவின் செவ்வாழையில்
அதிகாரச் சுரண்டல் . . . . . . . . . . . . . . . . . . . . . . 133
முனைவர் தே. இராணி எலிசபெத்

17. 'தலித்' கவிதைகளில் 'தலித்' விடுதலை . . . . . . . . . 140
முனைவர் இரா. இராமகுமார்

18. தமிழகமும் தலித் இலக்கியமும் . . . . . . . . . . . . . . . 147
முனைவர் இரா. இராமன்

19. பன்முக நோக்கில் தலித் இலக்கியங்கள் . . . . . . . . . 157
முனைவர் அ. இராஜலட்சுமி

20. சு. சமுத்திரத்தின் தலித்தியச் சிந்தனைகள் . . . . . . . 164
முனைவர் இர. இராஜேஷ்

21. ஆகாயத்தை அடைகாக்கும் முட்டைகள்
முன்வைக்கும் அடித்தட்டு மக்கள் . . . . . . . . . . . . . . 170
முனைவர் அ.இருதயராஜ்

22. புலம் பெயர்ந்த தாயகமும் மண்ணின் மனமும் . . . . . 176
முனைவர் து. இலங்கேஸ்வரி

12

# காலந்தோறும் இலக்கியங்களில் ஒடுக்கப்பட்டோர் பதிவுகள்

**முனைவர் சி. ஆன்சிமோள்**
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி)
ஹோலி கிறாஸ் கல்லூரி (தன்னாட்சி)
நாகர்கோவில், கன்னியாகுமரி மா.

**முன்னுரை**

மக்கள் கூட்டமாகச் சேர்ந்து வாழத் தொடங்கிய போது தொடங்கியது சமூகம் என்னும் நிறுவனமாகும். சமூகத்தில் தொழில், பொருளாதாரம், வாணிபம் முதலிய செயல்பாடுகள் தோன்றி வளர்ந்த பொழுது சமூகம் பிளவுபட்டதாகத் தோன்றியது எனலாம். இதனால் சாதி அமைப்பு முறையும், பொருளாதார ஏற்றத்தாழ்வும் தோன்றியது. சாதி, பொருளாதாரம், அரசு, குடும்பம் போன்றவை ஒரு சமூகத்தால் வளர்த்தெடுக்கப்படும்போது சமூகத்தில் அடுக்குகள் தோன்றுகின்றன. ஒவ்வொரு நிறுவனத்தினுள் வாழும் மக்களினமும் குறிப்பிட்ட வகை மக்களை ஒடுக்குதலுக்கு உள்ளாக்குகின்றனர். இதனால் ஒடுக்கப்பட்டோர் என்ற மக்கள் தொகுதி தோன்றுகின்றது.

இலக்கியங்கள் தோன்றிய காலந்தொட்டு தங்களது வாழ்வியல் நிகழ்வையும், சமூகப் போராட்ட நிலைப்பாடு களையும் ஒடுக்கப்பட்டோர் பதிவு செய்துள்ளதைச் சங்க இலக்கியங்களில் இருந்து இன்றைய நாவல்கள் வரை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அறிந்து கொள்ளும் வகையில் அமைகின்றது.

**சமூகமும் படைப்பும்**

சமூகம் நிறுவனத் தன்மையினை அடையும் நிலையில் தோன்றும் படைப்பானது நிறுவனத் தன்மையை எதிர்க்கும் அளவில் அமையத் தொடங்குகிறது. இது குறித்த செய்தியை மு.புஷ்பராஜன் தனது 'படைப்பும் அதிகார மையங்களும்' என்னும் கட்டுரையில் தருகின்றார். "படைப்பு இலக்கியத்திற்கும் அதிகார மையங்களாக அரசியல், சமூக, மத, பொருளாதார நிறுவனங்களுக்கும் இடையேயுள்ள உறவுகள் என்றுமே ஒரே சீராக இருந்தில்லை. சில வேளைகளில் அது சிக்கல் மிகுந்த உறவாகவே அமைந்து விடுகிறது. இவ்வதிகார மையங்களின் விருப்புகள், எதிர்பார்ப்புகள், கோட்பாடுகள் ஆகியனவற்றுக்கு எதிராக ஒரு படைப்பு அமையும் போது அப்படைப்பும் அப்படைப்பாளியும் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. ஆளுமை கொண்ட படைப்பாளிகள் மற்றவர்களின் தேவைக்காக எதையுமே படைப்பதில்லை. சமூக அனுபவங்களின் உள்வாங்கல்களாக அவர்கள் படைப்புகள் வெளிவரும் போது பல அதிகார மையங்களால் அவற்றைச் சகித்துக் கொள்ள முடியாமல் போவதுண்டு."

**மரபும் படைப்பும்**

சங்க இலக்கியத்தை மரபு இலக்கியம் என்று கூறுவார் உள்ளனர். தொடக்கக் காலத்தைய இலக்கியத்திலிருந்து தொடர்ச்சியாகக் கூறப்படும் மரபு வழியிலான செய்திகளைத் தொகுத்துப் பார்ப்பதன் மூலம் சங்க இலக்கியச் சமூகம் தொடங்கி இன்றைய நவீன இலக்கியமான நாவல் உருவாகும் காலக்கட்டம் வரை ஏற்பட்டுள்ள மாற்றத்தையும், சமூக இறுக்கத்தையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

மரபு குறித்த உண்மையான கருத்தியல்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இது குறித்துத் தி.சு.நடராஜன் கூறும் கருத்துக்கள்:-

"மரபு என்றால் பழசு. பழசுக்கு மாறானது, எதிரானது, மரபு என்றால் மாறாதது. மனித சமூகக் குழுக்களால் அங்கீகரிக்கப்பட்டு வருவது. தொடர்ந்து வரும் தலை முறையினரால் பகிர்ந்து கொள்ளப்படுவது.

என்பது பொருளாதார அடிப்படையில் சாதியமைப்புக்களைப் பகுத்துக் கொண்டு வாழ்ந்தது என்பது உண்மையாகின்றது.

பொருளியல் ஏற்றத் தாழ்வில் விளிம்பு நிலையில் வாழ்ந்த புலவர்களுள் பலரும் சிக்கியிருந்ததைச் சங்கப் பாடல்கள் விளக்குகின்றன.

**பக்தி இலக்கியங்களில் ஒடுக்கப்பட்டோர்**

பக்தி இலக்கியக் காலக்கட்டம் ஆரியச் செல்வாக்குப் பெற்று இருந்ததினால் சாதியப் பின்புலக் கருத்தமைவுகளின் அடிப்படையில் நிகழ்ந்த ஒடுக்குமுறைகளும், ஒடுக்கப் பட்டோர் வாழ்வியலும் அக்காலக்கட்டத்தில் தோன்றிய பாடல்களில் வெளிப்படத் தோன்றின. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்ற பக்தி இலக்கியக்காரர்கள் அக்காலத்தில் உணவு, உடை, பழக்க வழக்கங்களில் தோன்றியிருந்த சாதியக் கட்டுபாடுகளைக் கடந்து நின்று பேசிய பாடல்கள் வழியாகவும் நாம் ஒடுக்கப்பட்டோர் குரலை, முன் வைக்கலாம்.

சாதி சார்ந்த ஒடுக்குதலும் 'தொழுநோய்' போன்ற தீர்க்க இயலாத நோயினாலும் ஒதுக்கப்பட்ட மக்களைக் குறித்த செய்திகளைத் திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில் தருகின்றார்.

அழுகிப் போன தொழுநோயரானாலும் இறைச்சியை உண்பவரானாலும் சிவபெருமான் மீது பற்று வைத்த பேரன்பராகில் அவரையே நாம் கடவுளாகத் தொழுவோம் என்கிறார் திருநாவுக்கரசர். பக்தியில் சிவனை வணங்குமிடத்தில் சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் ஒடுக்கப்பட்டோராக இருப்பினும் அவர்கள் முதன்மையானவர்களே என்று கூறும் பாடல் வழியாகச் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோரது வாழ்வை நாம் அறியலாம்.

**"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து, எத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற்கு ஆள் என்று
உள் கலந்தார், அடியார் தம் அடியார் எம் அடிகேளா"**

**(நம்மாழ்வார், திருவாய்மொழி, பா.3078)**

### சிற்றிலக்கியங்களில் ஒடுக்கப்பட்டோர்

சிற்றிலக்கியக் காலத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களினத்தின் மீதான சமுதாயத் திட்டமிடல் மேலோங்கி இருந்ததைக் க.பூரணச்சந்திரன் விளக்குகின்றார்.

"கலம்பகப் பாடல்களின் எண்ணிக்கை நூதனமானது. வடமொழியாளரின் வருணப் பாகுபாட்டிற்கு ஏற்பப் பாடல் வகுக்கப்பட்டுள்ளது. சான்றாகப் பன்னிரு பாட்டியல் இறைவனுக்கு நூறும், முனிவர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், ஆகப் பாடல்கள் பாடப்படுதல் வேண்டும். அமைச்சர்களுக்கு எழுபது, வணிகர்களுக்கு ஐம்பது. வேளாளர்களுக்கு முப்பது என்று வரையறை அளிக்கிறது. இதனைப் பிரபந்த மரபியல் விளக்குகிறது." என்று க.பூரணச்சந்திரன் தனது கட்டுரையில் எடுத்துக் கூறுகிறார்.

'பள்ளு' என்னும் சிற்றிலக்கியம் இத்தகைய தன்மை கொண்டதே ஆகும். 'பள்ளு' என்ற இலக்கியம் பள்ளர் - மள்ளர் என்ற சமுதாயத்தைச் சேர்ந்த மக்களினத்தின் வரலாறாகவே அமைந்தது. தங்களது சாதியினரது வாழ்வினையும், பண்பாட்டையும் பறைசாற்றுகின்றதாக இந்த இலக்கியம் அமைந்தது. இவ்வாறு ஒடுக்கப்பட்டோர் தமது குரலை மேல் எழுப்பச் செய்திட முயற்சி செய்தனர்.

### தமிழில் தலித்திய நாவல்கள்

தலித் நாவல்கள் என அடையாளப்படுத்தப்படுகின்றவை தலித் மக்களுடைய விடுதலை உணர்வு, அவர்களது போராட்டம், தலித் வாழ்வியலை மக்கள் வாழ்வில் வெளிப்படுத்துதல் போன்றவை தலித் நாவல்களின் கருப்பொருள் ஆகின்றன எனலாம். மேலும் தலித்துக்கள் புனைவின் வழியாகத் தங்களது வாழ்வியலை மறு உருவாக்கம் செய்யத் தொடங்குகின்றனர்.

"தலித் நாவல் படைப்பாளர்கள் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எழுத்து வடிவில் செதுக்கியுள்ளனர். சாதி என்ற ஒன்றை உடைப்பதையே தலித் நாவல்கள் கொண்டுள்ளன. வேதனையின் வடிவம் சமுதாய மாற்றத்தை உருவாக்குவதாகும்."

என்று தனது கருத்தைப் பதிவு செய்யும் ஜோ.இம்மானுவேலின் செய்தி தலித் எழுத்திற்கான பண்பாட்டையும், அரசியலையும் முன் வைப்பவை என்பதை நமக்கு உணர்த்துகின்றன. மேலும் தலித்திய எழுத்திற்கான வலுவையும் நாம் அறியச் செய்கின்றன.

ஒடுக்கப்பட்ட மக்களில் இருந்து ஆதிக்கச் சாதிகளால் சற்று அதிகமாகச் சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட வாழ்வைக் கொண்ட மக்களாக வாழ்பவர்கள் மிக ஒடுக்கப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். தொழிலாலும், சாதியாலும் சமுதாயத்தில் மிக ஒடுக்கப்பட்டோர்கள் வாழ்கின்றனர். இவர்கள் பிறருக்காக வாழ வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். இவர்களது தொழிலும், சாதியப் பின்புலமும் ஆதிக்கத்தை அண்டியே வாழ வேண்டிய நிலை தொடர்வதால் மிகுந்த ஒடுக்குதலுக்கு இவர்கள் ஆளாகின்றனர்.

பூமணியின் 'பிறகு' பாமாவின் 'வன்மம்', சோ.தர்மனின் 'கூகை', இமயத்தின் 'செடல்', பெருமாள் முருகனின் 'கூளமாதாரி', பாண்டியக் கண்ணனின் 'சலவான்' போன்ற நாவல்களைச் சுட்டலாம்.

பாலமுருகனின் 'சோளகர் தொட்டி', பிரியா பாபுவின் 'மூன்றாம் பாலின் முகம்', சல்மாவின் 'இரண்டாம் சாமங்களின் கதை', ஆண்டாள் பிரியதர்ஷனியின் குகனம்', மலர்வதியின் 'தூப்புக்காரி' போன்ற நாவல்களை நாம் அதிமிக ஒடுக்கப்பட்டோர்க்கான நாவல்கள் அடையாளப்படுத்தலாம்.

ஒடுக்கப்பட்ட மக்களில் இருந்து ஆதிக்கச் சாதிகளால் சற்று அதிகமாகச் சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட வாழ்வைக் கொண்ட மக்களாக வாழ்பவர்கள் மிக ஒடுக்கப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். தொழிலாலும், சாதியாலும் சமுதாயத்தில் மிக ஒடுக்கப்பட்டோர்கள் வாழ்கின்றனர். இவர்கள் பிறருக்காக வாழ வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். இவர்களது தொழிலும், சாதியப் பின்புலமும் ஆதிக்கத்தை அண்டியே வாழ வேண்டிய நிலை தொடர்வதால் மிகுந்த ஒடுக்குதலுக்கு இவர்கள் ஆளாகின்றனர்.

பூமணியின் 'பிறகு', பாமாவின் 'வன்மம்', சோ.தர்மனின் 'கூகை', இமயத்தின் 'செடல்', பெருமாள் முருகனின் 'கூளமாதாரி, பாண்டியக் கண்ணனின் 'சலவான்' போன்ற நாவல்களைச் சுட்டலாம்.

பாலமுருகனின் 'சோளகர் தொட்டி', பிரியா பாபுவின் 'மூன்றாம் பாலின் முகம்', சல்மாவின். 'இரண்டாம் சாமங்களின் கதை', ஆண்டாள் பிரியதர்ஷனியின் குகனம்', மலர்வதியின் 'தூப்புக்காரி' போன்ற நாவல்களை நாம் அதிமிக ஒடுக்கப்பட்டோர்க்கான நாவல்கள் அடையாளப்படுத்தலாம்.

**முடிவுரை**

மனிதன் கூட்டமாக வாழத் தொடங்கியதில் சமுதாயத்தில் மாற்றம் எற்படத் தொடங்கியது. சமூகம் நிறுவனமாகத் தொடங்கியதற்கு அதனுள் தோன்றிய வர்க்கம், போர், நிலவுடைமை, வறுமை, சாதி, தொழில் போன்ற பலவற்றைக் கூறலாம். விளிம்பு நிலையினர் எனப்பட்ட ஒடுக்கப்பட்டோர் இலக்கியங்கள் தோன்றின. சமகாலத்தில், யதார்த்தப் புனைவுகள் தோன்றின. உள்ளதை உள்ளதாகக் காட்டும் நாவல் வடிவங்கள் தோன்றின. இதனால் சமுதாயத்தில் அழுத்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட அடையாளங்கள் மீட்டெடுக்கப்பட்டன. இவ்வாறு காலந்தோறும் பதிவுகள் இருப்பினும் நாவல் இலக்கிய வரவால் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகம் மறு அடையாளத்தைக் கொண்டது எனலாம்.

**துணை நூற்பட்டியல்**

1. மு.புஷ்பராஜன், படைப்பும் அதிகார மையங்களும், ப.77.
2. தி.சு.நடராஜன், கவிதையெனும் மொழி, பக். 16-17.
3. கா.சிவதம்பி, தொல்காப்பியமும் கவிதையும், ப. 34.
4. சி.மௌனகுரு, தமிழர் பண்பாடும் தெரிந்ததும் தெரியாததும், ப. 50
5. ஜோ.இம்மானுவேல், தமிழ் தலித் நாவல் இலக்கிய வரலாறு, ப. 24.

# மாநிலக்கல்லூரி (தன்னாட்சி)

சென்னை - 600 005.

கலைஞர் 100 1924 - 2023

# தமிழ்த்துறை

## தமிழில் தலித் இலக்கியம்

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு

### பன்னாட்டுக் கருத்தரங்கம் - நாள் : 31.10.2023

## சான்றிதழ்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டைச் சிறப்பிக்கின்ற வகையில் மாநிலக்கல்லூரித் தமிழ்த்துறை சார்பில் "**தமிழில் தலித் இலக்கியம்**" என்னும் பொருண்மையில் **31.10.2023** ஆம் நாளன்று நடத்தப்பெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் "காலந்தோறும் இலக்கியங்களில் ஒடுக்கப்பட்டோர் பதிவுகள்" எனும் தலைப்பில் முனைவர் சி. ஆன்சி மோள் அவர்கள் கலந்து கொண்டு "காலந்தோறும் இலக்கியங்களில் ஒடுக்கப்பட்டோர் பதிவுகள்" என்னும் தலைப்பில் கட்டுரை அளித்தார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

முனைவர் ப. தாமரைக்கண்ணன்
தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் இரா. இராமன்
கல்லூரி முதல்வர்